©
தமிழ்நாடு அரசு
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 49] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 24, 2014
மார்கழி 9, ஜய, திருவள்ளுவர் ஆண்டு–2045

## பகுதி VI—பிரிவு 1இன் இணைப்பு

### துறைத் தலைவர்களுடைய அறிவிப்புகள்

**1975–ம் வருட தமிழ்நாடு சங்கப்பதிவுச் சட்டம் பிரிவு 44(3)–ன்கீழ் செயல்படாத சங்கங்களுக்கான அறிவிக்கை.**

*(கடித எண் 1049/இ1/2014.)*

Council for Community Development (சங்கப் பதிவெண். 60/89) சங்கமானது தமிழ்நாடு சங்கப்பதிவுச் சட்டம் பிரிவு 16(3)–ன்படி கோர்வை செய்ய வேண்டிய அறிக்கைகளைக் கடந்த 3 (மூன்று) நிதி ஆண்டுகளுக்கு மேல் கோர்வை செய்யாமல் இருப்பதைத் தொடர்ந்து, செயல்படாத சங்கமாக கருத வேண்டியுள்ளது.

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் பிரிவு 44(3)(b)–ன்கீழ் அனுப்பப்படும் இவ்வறிவிப்பானது, **தமிழ்நாடு அரசிதழில்** இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள் சங்கம் செயல்பாடு சம்மந்தமாக, தக்க விளக்கம் அளிக்கப்படவில்லையெனில், சங்கப் பெயர் சங்கப் பதிவேட்டிலிருந்து பதிவு நீக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

செங்கற்பட்டு,
**2014 நவம்பர் 25.**

**இரா.சு. இராசன்,**
*சங்கங்களின் பதிவாளர் மற்றும்*
*மாவட்டப் பதிவாளர்.*

## 1983—ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 142—ன்கீழான அறிவிக்கைகள்.

### 0.2173. பாரத ஸ்டேட் வங்கி பணியாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்.

*(ந.க. எண் 1293/2010/ஈ1)*

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டத்திலுள்ள கலைக்கப்பட்ட 0.2173. பாரத ஸ்டேட் வங்கி பணியாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் 1983—ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 142—ன்படி துணைப் பதிவாளர் (வீட்டுவசதி) திருநெல்வேலியால் 2014—ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14—ம் நாள் மீண்டும் புத்துயிரூட்டப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி,
2014 அக்டோபர் 27.

**பா. வளர்மதி,**
*துணைப் பதிவாளர், (வீட்டுவசதி).*

### 0.2193. திருநெல்வேலி மின்வாரிய பணியாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்.

*(ந.க. எண் 1298/2010/ஈ1)*

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டத்திலுள்ள கலைக்கப்பட்ட 0.2193. திருநெல்வேலி மின்வாரிய பணியாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் 1983—ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 142—ன்படி துணைப் பதிவாளர் (வீட்டுவசதி) திருநெல்வேலியால் 2014—ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14—ம் நாள் மீண்டும் புத்துயிரூட்டப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி,
2014 அக்டோபர் 29.

**பா. வளர்மதி,**
*துணைப் பதிவாளர், (வீட்டுவசதி).*

---

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.